பக்கங்கள்: 05

# THEEMPUNAL தீம்புனல்

மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:32 | 15.12.2023 வெள்ளிக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053




## சீனக் கப்பலுக்கு அனுமதி வழங்க இந்தியா எதிர்ப்பு

தென் இந்தியப் பெருங்கடலில் ஜனவரி 5 முதல் மே 2024 வரை, பெஜ்ஜிங் மற்றொரு ஆய்வுக் கப்பலைத் துறைமுகங்களில் நிறுத்தி ஆழமான கடல் ஆய்வுகளை நடத்த அனுமதிக்க கொழும்பு மற்றும் மாலைதீவுகளிடம் சீனா அனுமதி கேட்டுள்ளது.

இலங்கை, மாலைதீவுகள் ஆகிய நாடுகள் ஏற்கெனவே சீனக் கப்பலுக்கு அனுமதி வழங்கியதற்கு, இந்தியா தனது எதிர்ப்பை பதிவு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. தற்போது தென் சீனக் கடலில் உள்ள ஜியாமென் கடற்கரையில் உள்ள, சியாங் யாங் ஹாங் ஆய்வு கப்பல், இலங்கை மற்றும் மாலைதீவுகளிடம் அனுமதி கிடைத்தபின், அங்கு ஆய்வுகளை மேற்கொள்ளும். ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில், இந்தியாவின் கடும் எதிர்ப்புகளை பொருட்படுத்தாமல், ஷி யான் 6 ஆய்வுக் கப்பலுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இக்கப்பல், இலங்கைக்கு செல்வதற்கு முன், இந்த ஆண்டு ஒக்ரோபர் 25 ஆம்



திகதி, சென்னையிலிருந்து 500 கடல் மைல்கள் தொலைவில் தென்பட்டது. பின்னர் அங்கு சென்று பிரத்தியேக பொருளாதார மண்டலத்தில் ஆய்வு மேற்கொண்டது.

தற்போது ஆய்வு செய்ய இருக்கும் சியாங் யாங் ஹாங், 4,813 டன் எடை கொண்ட அதிநவீன ஆய்வு மற்றும் கண்காணிப்பு உபகரணங்களை கொண்ட கப்பலாகும்.

கடலாய்வு என்ற பெயரில் சீன பாலிஸ்டிக் ஏவுகணை டிராக்கர்கள் மற்றும் ஆராய்ச்சி கண்காணிப்பு கப்பல்களை, மாலைதீவுகள் மற்றும் இலங்கை அனுமதிப்பது, சீனா இந்தியாவை உளவு பார்ப்பதற்காக என இந்தியா கருதுகிறது.

மேலும் இது குறித்து, இந்த ஆண்டு இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா வந்தபோது, பிரதமர் மோடி தனது கவலைகளைத் தெரிவித்தார்.

கடல் ஆய்வு என்ற பெயரில், பீஜ்ஜிங் உண்மையில் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளுக்கு தெற்கே உள்ள தொண்ணூறு டிகிரி மேடு முதல் ஆழமான தென் இந்தியப் பெருங்கடல் வரை காலூன்றியுள்ளது.

## ஏழு இலட்சம் பேர் இலங்கையைவிட்டு வெளியேறினர்

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக கடந்த நான்கு வருடங்களில் 7 இலட்சத்து 32 ஆயிரம் பேர் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

தகவலறியும் சட்டத்தின் கீழ் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குருநாகல் கிளை பணியகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கு இணங்க, இது தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கையிலேயே இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இத்தகவல்களுக்கு இணங்க இலங்கையர்கள் வீட்டுப் பணிப்பெண்களாகவும் தொழிலாளர்களாகவும் மின்சார கைத்தொழில் துறை வேலைவாய்ப்புக்காகவும் சாரதி உள்ளிட்ட ஏனைய தொழில்களுக்காகவும் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் 15 பிரதேச அலுவலகங்கள் நாடளாவிய ரீதியில் காணப்படுகின்றன.

இந்த அலுவலகங்களின் ஆலோசனையைப் பெற்றுக் கொண்டே சட்ட ரீதியாக மேற்படி 07 இலட்சத்து 32 ஆயிரம் பேரும் வெளிநாடு சென்றுள்ளனர்.

## கிளிநொச்சியில் 26 குடும்பங்கள் பாதிப்பு

கிளிநொச்சியில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் புளியம்பொக்கனை ஆகிய பகுதிகளில் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். சிலர் தமது இருப்பிடங்களை விட்டு அயலவர், உறவினர் வீடுகளில் தங்கி உள்ளனர். தருமபுரம் மத்தியகல்லூரி, தருமபுரம் இலக்கம் 1 பாடசாலை ஆகியவற்றுக்கு இன்று விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இந்த அனர்த்தம் தொடர்பாக பிரதேச செயலகம் கிராமசேவையாளர் ஊடாக பாதிக்கப்பட்டவர்களிடம் விபரங்களை சேகரித்துவருகிறது.

கிளிநொச்சி கனகாம்பிகைக்குளத்தின் வான்பாய்வதால் 26 குடும்பங்கள் வெள்ளநீரில் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன், மக்களின் குடியிருப்புகளிற்குள்ளும் வெள்ள நீர் சென்றுள்ளது.

## இரணைமடு குளத்தின் வான் கதவுகள் திறப்பு



வடக்கின் பெரிய நீர்பாசன குளங்களில் ஒன்றான இரணைமடு குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. அதிக நீர் வருகை காரணமாக இன்று (15.12.2023) அதிகாலை வான் கதவுகள் படிப்படியாக திறக்கப்படும் என நீர்பாசனத் திணைக்களம் ஏற்கெனவே அறிவித்திருந்தது.

இன்று 12 வான் கதவுகள் திறந்து விடப்பட்டன. படிப்படியாக வான்கதவுகள் திறக்கப்படும் எனவும், அறிவுறுத்தலிற்கு அமைவாக மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் நீர்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சியாக மழை பெய்து வருவதாலும், குளங்கள் வான்பாய்வதாலும் மக்கள் இடர்கள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

# சூரியசக்தி மின் உற்பத்தி வேலைத்திட்டத்தில் பாரிய ஊழல் மோசடி

யுனைடட் சோலார் எனர்ஜி நிறுவனம் மூலம் பூநகரியில் 700 மெகா வாட் சூரியசக்தி மின் வலு உற்பத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது என்றும், இத்திட்டத்தின் பின்னணியில் மறைக்கப்பட்ட பல தகவல்கள் இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். இத் திட்டத்தின் கீழ் பூநகரியில் புதிய கிளிநொச்சி கிரிட் உப சந்தை வரை தேவையான கடத்தி இணைப்பு மார்க்கங்களை உருவாக்குதல் மற்றும் 100% மின்கல சேமிப்பு ஆற்றல் திறன் கொண்ட 700 மெகாவாட் சூரியசக்தி மின் வலு நிலையத்தை உருவாக்கும் திட்டம் ஒரு வேலைத் திட்ட முன்னெடுப்பாக நம்பிக்கையளித்தாலும், முறையான மற்றும் வெளிப்படையான கொள்முதல் முறையின்றி செயல்படும் "புதுப்பிக்கத்தக்க எரி சக்தி" என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் மின்சாரத் துறையில் நடக்கும் மற்றொரு மிக பாரிய ஊழல் மோசடியே இது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்தில் இலங்கைக்கான தூதுவர்கள்

சுவிட்சர்லாந்தின் தூதுவர் சிறி வால்ட், ஜப்பான் தூதுவர் ஹிடேகி மிசுகோஷி மற்றும் தென்னாபிரிக்காவின் உயர்ஸ்தானிகர் சடைல் ஷால்க் ஆகியோர் நேற்று (14) பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படை தலைமையகத்திற்கு சென்று கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

வெளிநாட்டு தூதுவர்கள் யாழ்.மாவட்ட பாதுகாப்புப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.ஆர்.கே ஹெட்டியாராச்சியுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இச்சந்திப்பின் போது, இராணுவ ஒத்துழைப்பு, சமூக நலத்திட்டங்கள், அபிவிருத்தி உதவிகள் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பில் கருத்துகளை பரிமாறிக் கொண்டதாக அறிய முடிகிறது.

## சீன - இலங்கை இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

பசுமை திட்டமிடல் வலயங்களை உருவாக்குவதற்கு சீன கல்வி நிறுவனத்துக்கும் இலங்கை முதலீட்டு சபைக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து முதலீட்டு வலயங்களும் பசுமை முதலீட்டு வலயங்களாக மாற்றப்படும் சாத்தியம் காணப்படுவதாக இலங்கை முதலீட்டு சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், அடுத்த வருட இறுதிக்குள், சீன கல்வி நிறுவனத்தின் மூலம் மூன்று முதலீட்டு வலயங்கள் சுற்றாடல் பாதுகாப்பு பசுமை திட்டமிடல் வலயங்களாக மாற்றப்படும் எனவும் அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

## கொக்குத்தொடுவாய் புதைகுழி பகுப்பாய்வு செய்ய ஏற்பாடு

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இருந்து தோண்டியெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் வயது பாலினம் (ஆண், பெண்) ஆகிய வற்றை அடையாளம் காண இம்மாதம் 21, 22 ஆம் திகதிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (14) முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார். ஏற்கெனவே எடுக்கப்பட்ட 40 மனித எலும்புக் கூடுகளில் இருந்து அதனுடைய ஆய்வுகளை, அதன் வயது, அது ஆணா பெண்ணா போன்ற ஆய்வுகளை டிசம்பர் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்வது தொடர்பாக சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.




“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# முட்டைக்கும் கோழி இறைச்சிக்கும் தட்டுப்பாடு

கிறிஸ்மஸ், புதுவருடம் ஆகிய பண்டிகைகள் நெருங்கும் காலத்தில் முட்டைக்கும் கோழி இறைச்சிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அவற்றை இறக்குமதி செய்யப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இதேவேளை அவற்றின் விலையும் சடுதியாக அதிகரித்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் முட்டை மற்றும் கோழி இறைச்சிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் அவற்றை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு, கடந்த வாரம் முதல் உள்நாட்டு சந்தையில் முட்டை, கோழிக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது. பிரதான சந்தைகளில் முட்டை, கோழி இறைச்சி இருப்பு இல்லை என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கையிருப்பில் இருப்பவைகளை நிறுத்தி வைக்காமல் கோழி இறைச்சி, நுகர்வோர் விவகார ஆணையம் (CMM) போன்றவற்றில் ஏதேனும் கையிருப்பு வைத்திருந்தால், சோதனை செய்யுமாறு அமைச்சகத்தால் அறிவுறுத்தப்பட்டது.

ஸ்டேட் டிரேடிங் (பொது) கார்ப்பரேஷனின் (எஸ்.டி.சி) கையிருப்பில் இப்போது சுமார் 22 மில்லியன் முட்டைகள் இருப்பதாகவும், எனவே அடுத்த இரண்டு வாரங்களில் தட்டுப்பாடு ஏற்படாது என்றும் அவர் கூறினார். கடைகளிலுள்ள அனைத்து பங்குகளையும் விடுவிக்குமாறு STC க்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் சந்தையை தொடர்ந்து கண்காணிக்க நடவடிக்கை எடுக்குமாறும் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

முன்னணி உள்ளூர் உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்கள் கடந்த திங்கட்கிழமை (11) அமைச்சுக்கு அழைக்கப்பட்டதாகவும், தற்போது அவர்களிடம் உள்ள பங்குகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை சமர்ப்பிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டதாகவும் அவர் கூறினார். அதபத்துவின் கூற்றுப்படி, இந்த நடவடிக்கைகளால் தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்படாவிட்டால், முட்டை மற்றும் கோழி இறைச்சியை தொடர்ந்து இறக்குமதி செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்கும்.

சிங்கள, தமிழ் புத்தாண்டு, கிறிஸ்மஸ் போன்ற ஒவ்வொரு பண்டிகைக் காலத்திலும் சப்ளையர்களும் விற்பனையாளர்களும் வேண்டுமென்றே இத்தகைய தட்டுப்பாடுகளை உருவாக்குவதால் இத்தகைய சூழ்நிலைகளுக்கு அமைச்சு தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், இதே விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர புதன்கிழமை (13) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், முட்டை மற்றும் கோழிப்பண்ணைகளை சந்தைக்கு வெளியிடாமல் மறைத்து வைப்பவர்களுக்கு எதிராக அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கும்.

இந்தக் காலத்தில் முட்டை, கோழி இறைச்சி ஆகியவற்றின் விலை அதிகரிப்பதும் அவற்றுக்குத்தட்டுப்பாடு ஏற்படுவதும் வருடாந்த விழா போல் அமைந்துள்ளது. முட்டை, கோழி இறைச்சி ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அல்லது அவற்றைத் தாராளமாக இறக்குமதி செய்வதற்குரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும் என அரசாங்கமும் அதில் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

# இலவச விஸா வழங்கும் கென்யா

இலவச விஸா வழங்கும் நாடுகள் பட்டியலில், கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவும் இணைந்துள்ளது. கென்யாவின் அதிபர் வில்லியம் ருடோ சில நாட்களுக்கு முன்பு, கென்யாவிற்கு விடுமுறைக்கு வருபவர்களுக்கு ஜனவரி முதல் விஸா தேவையில்லை என்று அறிவித்தார். இதன் மூலம் மசாய் மாராவின் கம்பீரமான சிங்கங்கள், உயரமான ஒட்டகச்சிவிங்கிகள் மற்றும் அழகான விண்மீன்களை பார்ப்பது மிகவும் எளிதாகிறது. ஜனவரி மாதம் முதல் கென்யாவிற்கு பயணம் மேற்கொள்பவர்கள் விஸாவிற்குப் பதிலாக, அந்நாட்டு அரசாங்கம் வழங்கும் ‘மின்னணு பயண அங்கீகாரம்’ பெற்றால் போதுமானது.

# பைடன் மீதான விசாரணைக்கு ஒப்புதல்



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மகன் ஹண்டர் பைடன் ரூ.11 கோடி வரி ஏய்ப்பு செய்ததாக சமீபத்தில் குற்றம் சாட்டப்பட்டது. ஜோ பைடன் துணை ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவரது பதவியை பயன்படுத்தி ஹண்டர் பைடன் ஆதாயம் பெற்றதாகவும், அதனை ஜோ பைடன் தடுக்கத் தவறியதாகவும் அவர் மீது ஊழல் குற்றச்சாட்டு எழுந்தது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டினை ஜோ பைடன் மறுத்துள்ளார். இந்தநிலையில் ஜோ பைடனை பதவிநீக்கம் செய்யக் கோரி குடியரசு கட்சியினர் வலியுறுத்தினர். இதற்காக நாடாளு மன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பு வெற்றிகரமாக நிறைவேறியது. எனவே, ஜோ பைடன் மீதான பதவிநீக்க தீர்மானம் குறித்த விசாரணைக்கு சபாநாயகர் மைக் ஜான்சன் ஒப்புதல் அளித்துள்ளார்.

# யூத நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்த சதி

ஐரோப்பாவில் உள்ள யூத நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டியதாக டென்மார்க், ஜேர்மனி மற்றும் நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகளில் ஹமாஸ் உறுப்பினர்கள் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூன்று பேர் ஜேர்மனி தலைநகர் பெர்லினிலும் மற்றொருவர் நெதர்லாந்திலும் மூவர் டென்மார்க்கிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த மூன்று கைதுகளுக்கும் இடையே ஏதேனும் தொடர்புகள் உள்ளனவா? என்று விசாரணை நடைபெற்று வருகிறது. ஜேர்மனி மற்றும் நெதர்லாந்தில் கைது செய்யப்பட்ட நால்வருக்கும் ஹமாஸ் இயக்கத்துடன் நேரடி தொடர்பு இருப்பதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

# ஆப்கானிய அகதிகள் வெளியேற காலக்கெடு நீடிப்பு

பாகிஸ்தானில் உள்ள ஆப்கானிய அகதிகளின் எண்ணிக்கை சுமார் 17 லட்சமாக உயர்ந்தது. இந்நிலையில் சமீப காலமாக பாகிஸ்தானில் பயங்கரவாத தாக்குதல்கள் அதிகரித்து வருகிறது. இதற்கு தலிபான் களுடன் தொடர்புடைய பயங்கரவாத அமைப்புகள்தான் காரணம் என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. எனவே, நாட்டில் உள்ள பதிவு செய்யப்படாத அகதிகள் அனைவரும் வெளியேற வேண்டும் என பாகிஸ்தான் அரசாங்கம் உத்தரவிட்டது. இதனால் பாகிஸ்தானில் இருந்து ஏராளமான அகதிகள் வெளியேறினர். ஆனால் மேற்கத்திய நாடுகளில் குடியேறுவதற்காக காத்திருக்கும் அகதிகளுக்கு டிசம்பர் 31 ஆம் திகதிவரை கெடு விதிக்கப்பட்டு உள்ளது. எனினும் அதற்கான ஏற்பாடுகள் இன்னும் முடியாததால் இந்தக் காலக்கெடுவை நீடிக்க கோரி ஆப்கானிஸ்தானுக்கான அமெரிக்க சிறப்பு பிரதிநிதி தாமஸ் வெஸ்ட் பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி ஜலீல் அப்பாசை சந்தித்து வலியுறுத்தினார். அதன் பேரில் மேலைநாடுகள் செல்ல காத்திருக்கும் அகதிகளுக்கான காலக்கெடு அடுத்த ஆண்டு (2024) பெப்ரவரி 29 வரை நீடித்து பாகிஸ்தான் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

# பூமியைக் காப்பாற்றுங்கள் இந்தியச் சிறுமி முழக்கம்

“துபாய், துபாயில், சிஓபி28 (CXP28) என்ற காலநிலை மாற்ற தடுப்பு நடவடிக்கைகள் குறித்த 28 ஆவது உச்சி மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் இந்தியாவின் மணிப்பூரைச் சேர்ந்த 12 வயதான லிசிபிரியா கங்குஜம், திமோர் லெஸ்டே நாட்டின் சிறப்பு தூதராக கலந்துகொண்டார். மாநாட்டில், லிசிபிரியா ‘புதைபடிவ எரிவாயுக்களுக்குத் தடை விதியுங்கள். நம் பூமி மற்றும் நம் எதிர்காலத்தைக் காப்பாற்றுங்கள்’ என்று எழுதப்பட்டிருந்த பதாகையுடன் மேடையில் ஏறினார். இதனைக் கண்ட பார்வையாளர்கள் பலரும் வரவேற்று கைதட்டினர். ஆனாலும் அவருடைய நடவடிக்கை விதிகளுக்குப் புறம்பானது என்பதால் அவர் மாநாட்டில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டது. அத்துடன் அங்கிருந்த காவலர்களாலும் அழைத்துச் செல்லப்பட்டார்.

## பொருட்களின் விலையைக் குறைத்தது சதொச

சதொசவில் இன்று முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை 10 அத்தியாவசியப் பொருட்களின் விலையை குறைத்துள்ளது. பால்மா ரூ.10 இனாலும் இறக்குமதி செய்யப்பட்ட ரின் மீன் (425 கிராம்) ரூ.55 இனாலும் 155 கிராம் இறக்குமதி செய்யப்பட்ட ரின் மீன் 10 ரூபாவினாலும் 425 கிராம் உள்நாட்டு ரின் மீன் 20 ரூபாவினாலும் உள்ளூர் உருளைக்கிழங்கு 15 ரூபாவினாலும் இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு 15 ரூபாவினாலும் கொண்டைக்கடலை 5 ரூபாவினாலும் விலை குறைக்கப்பட்ட பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## வைத்தியர்களின் ஓய்வுக்காலம் நீடிப்பு

அரசில் பணியாற்றும் விசேட வைத்திய நிபுணர்களின் ஓய்வு வயதை 63 ஆக நீட்டிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரச சேவையில் உள்ள விசேட வைத்திய நிபுணர்கள் 60 வயதில் ஓய்வுபெறச் செய்யும் அரசாங்கத்தின் தீர்மானத்தை எதிர்த்து வைத்தியர்கள் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு மீதான தீர்ப்பை வழங்கும் போதே மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

## அக்போ யானையை வீடியோ எடுத்தவர் கைது

ட்ரோன் கமரோ மூலம் அக்போ யானை வீடியோ எடுக்க முயன்ற நபர் ஒருவர் கடந்த புதன்கிழமை (13) மாலை திரப்பனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு பேரில் பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உள்ளான அக்போ யானை, வனவிலங்கு திணைக்கள அதிகாரிகளின் சிகிச்சைக்குப் பின் விடுவிக்கப்பட்டது.

அக்போ யானை தற்போது திறப்பனைப் பகுதியில் உலாவி வருகிறது.

## பேக்கரிப் பொருட்களின் விலை அதிகரிக்கும்?

முட்டை, சீனி, வெங்காயம் ஆகியவற்றின் விலையைக் குறைக்க அரசாங்கம் தலையிடாவிட்டால், பாண் தவிர்ந்த பேக்கரிப்பொருட்களின் விலை இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அதிகரிக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, பாண் தவிர்ந்த பேக்கரிப்பொருட்களின் விலை பத்து ரூபாவினாலும் கேக் கிலோ ஒன்றின் விலை நூறு ரூபாவினாலும் அதிகரிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## உடவலவ அணைக்கட்டு வீதி போக்குவரத்து தடை



அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் காரணமாக உடவலவ அணைக்கட்டு ஊடாக உள்ள வீதி இன்று (15) முதல் தற்காலிகமாக மூடப்படும் என இலங்கை மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதம் 15 ஆம் திகதி வரை பல கட்டங்களாக வீதி மூடப்படும். டிசம்பர் 22 ஆம் திகதி வரை வீதி முழுமையாக மூடப்படும். அதேவேளை டிசம்பர் 23 ஆம் திகதி முதல் ஜனவரி 6 ஆம் திகதி வரை அதன் ஒரு வழிப்பாதையாகச் செயற்படும்.

எதிர்வரும் ஜனவரி 7 ஆம் திகதி முதல் ஜனவரி 14 ஆம் திகதி வரை மீண்டும் வீதி முற்றாக மூடப்படும் என மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.

உடவலவ அணைக்கட்டு ஊடான வீதி எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதி போக்குவரத்துக்காக முழுமையாக திறக்கப்படவுள்ளது.


வீதி மூடப்படும் காலப்பகுதியில் உடவலவ, எம்பிலிப்பிட்டிய ஊடாக 13 ஆவது மைல்கல் வரையான வீதியை மாற்று வீதியாகப் பயன்படுத்த முடியும் என இலங்கை மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.

## மட்டு வாவியில் இருந்து சடலம் மீட்பு

மட்டக்களப்பு வாவியில் மெனிங் ரைவர் வீதியில் பகுதி வாவிகரையில் நேற்று 14 இரவு 7 மணியளவில் இரவு மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர் ஒருவரின் வலையில் சடலம் ஒன்று சிக்கியதால் அவர் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார். சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு கரைக்கு கொண்டு வந்ததுடன் தடவியல் பொலிஸ் பிரிவினர் அழைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த நபர் 60 வயதுக்கு மேற்பட்டவர் எனவும் இது வரை அடையாளம் காணப்படவில்லை எனவும் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக நீதிமன்ற அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முட்டை விலை அதிகரிப்பு



இந்தியாவில் இருந்து 30 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் சதொச நிறுவனத்திற்காக தினமும் இரண்டு மில்லியன் முட்டைகள் வெளியிடப்படுவதாகவும் இலங்கை அரச வர்த்தக சட்ட கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்தார்.

பண்டிகைக் காலத்துக்கான கேக் உற்பத்திக்காக பெரிய அளவிலான பேக்கரி உரிமையாளர்கள் அதிக அளவில் முட்டைகளை வாங்குவதால் இருப்புத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உற்பத்தியாளர்கள் முட்டையை மறைத்து, முட்டை விலையை உயர்த்தி நுகர்வோரை அசௌகரியப்படுத்தினால் அடுத்த ஆண்டும் முட்டையை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுப்பதாக, சமீபத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் வர்த்தகம் வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்புத் துறை அமைச்சர் தெரிவித்தார். கடந்தவாரம் முதல் 425 ரூபாவாக இருந்த முட்டையின் விலையை 605,70 ரூபாவரை வியாபாரிகள் உயர்த்தியுள்ளனர்.

## இலங்கை இளநீருக்கு அதிகரித்துள்ள கேள்வி

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் இளநீருக்கு அதிகளவான கேள்வி இருப்பதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

மாதாந்தம் 200 இளநீர் கொள்கலன்கள் அந்த நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இந்நிலையில், முதன்முறையாக தோட்டப் பயிர்களாக பயிரிடப்பட்ட இளநீரை ஏற்றுமதி சார்ந்த பயிராக பயிரிட விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு இன்று (14) நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி முருதவெல மேல் பிரதேசத்தை இலங்கையின் முதலாவது இளநீர் செய்கை மாதிரி கிராமமாக அபிவிருத்தி செய்யும் பணி விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.



முன்னோடித் திட்டமாக இந்தப் பகுதியிலுள்ள தோட்டங்களில் முதலில் 1,500 இளநீர் மரங்கள் நடப்படும். அதற்காக உயர்தர இளநீர் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு அமைச்சரினால் இன்று இடம்பெற்றது.

# சூரியகுமார் சதம் இந்தியா வெற்றி

தென் ஆபிரிக்காவுக்கு எதிராக ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெற்ற 3 ஆவது ரி20 போட்டியில் இந்தியா 106 ஓட்டங்களால் வெற்றி பெற்று தொடரைச் சமப்படுத்தியது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 201 ஓட்டங்கள் எடுத்தது. சூரியகுமார் யாதவ் 100, ஜெய்ஸ்வால் 60 ஓட்டங்கள் எடுத்தனர். ரிங்கு சிங் 14 ஓட்டங்கள் எடுத்தார். இருவர் ஓட்டம் எடுக்காது ஆட்டமிழந்தனர். ஏனையவர்கள் ஒற்றை இலக்கத்துடன் வெளியேறினர்.

தென் ஆபிரிக்கா 13.5 ஓவர்களிலேயே அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 95 ஓட்டங்கள் மட்டுமே அடித்தது. டேவிட் மில்லர் அதிகபட்சமாக 35 ஓட்டங்கள் எடுத்தார். இந்திய அணி 106 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதோடு மட்டுமின்றி இந்த மூன்று போட்டிகள் கொண்ட ரி 20 தொடரையும் ஒன்றுக்கு ஒன்று (1) என்ற கணக்கில் சமன் செய்தது. இந்நிலையில் இந்தப் போட்டியின் போது அதிரடியாக விளையாடி சதம் விளாசிய கப்டன் சூரியகுமார் யாதவ் ஆட்டநாயகனாகவும், தொடர் நாயகனாகவும் அறிவிக்கப்பட்டார்.

**பிறந்த நாளில் குல்தீப் சாதனை**


ரவீந்திர ஜடேஜா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். கடைசி 7 பந்துகளில் 4 விக்கெட்டுகள் எடுத்த குல்தீப் பிறந்தநாளில் மொத்தம் 5 விக்கெட்டுகள் சாய்த்து இந்தியாவின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றினார். 2.5 ஓவரிலேயே 17 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 5 விக்கெட்டுகளை எடுத்த குல்தீப் அறிவிக்கப்படாத ஆட்டநாயகன் அசத்தினார் என்றே சொல்லலாம்.

டிசம்பர் 14ஆம் திகதி 29 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய குல்தீய சுழலில் மாயாஜாலம் நிகழ்த்தி டேவிட் மில்லர் உட்பட தன்னுடைய கடைசி 7 பந்துகளில் 4 விக்கெட்டுகளை எடுத்து இந்தியா மிகப்பெரிய வெற்றியை பதிவு செய்வதற்கு முக்கிய காரணமாக அமைந்தார். அதைவிட இதன் வாயிலாக சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் தம்முடைய பிறந்தநாளில் 5 விக்கெட்டுகளை எடுத்த முதல் வீரர், சிறந்த பந்து வீச்சைப் (5/17) பதிவு செய்தவர் ஆகிய 2 தனித்துவமான உலக சாதனையையும் அவர் படைத்துள்ளார். இதற்கு முன் கடந்த 2021 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான போட்டியில் இலங்கை வீரர் வணிந்து ஹஸரங்கா தனது பிறந்தநாளில் 9 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 4 விக்கெட்டுகளை எடுத்ததே முந்தைய சாதனையாக இருந்தது. 2018 ஆம் ஆண்டு மான்செஸ்டரில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான போட்டியிலும் 5/24 விக்கெட்களை எடுத்த குல்தீப் யாதவ் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெறுவதற்கு உதவினார்.

ஜோஹன்ஸ்பர்க், மான்செஸ்டர் ஆகிய இரண்டு வெளிநாட்டு மைதானங்களில் நடைபெற்ற ரி20 போட்டிகளில் குல்தீப் 5 விக்கெட்களை எடுத்துள்ளார். இதன் வாயிலாக சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் வெளிநாட்டு மண்ணில் 2 முறை ஒரு போட்டியில் 5 விக்கெட்களை எடுத்த முதல் இந்திய பந்து வீச்சாளர் என்ற பும்ரா, சஹால் போன்ற யாருமே செய்யாத மாபெரும் சாதனையையும் குல்தீப் யாதவ் படைத்துள்ளார். மூன்று வருடங்களில் சூரியகுமார் உலக சாதனை சூரியகுமார் யாதவ் ரி20 யில் நான்கு சதங்கள் அடித்து ரோஹித் சர்மா, கிளன் மேக்ஸ்வெல் ஆகியோருடன் இணைந்துள்ளார். 2007இல் அறிமுகமான ரோஹித் சர்மா 16 வருடங்களில் 140 ஆவது போட்டியில் 4 ஆவது சதத்தை அடித்தார். 2012 இல் அறிமுகமான மேக்ஸ்வெல் 11 வருடங்களில் 92 ஆவது போட்டியில் 4 ஆவது சதத்தை அடித்தார். 2021இல் அறிமுகமான சூரியகுமார் வெறும் 3 வருடங்களுக்குள் 57 ஆவது போட்டியில் 4 ஆவது சதத்தை அடித்து வியப்பை ஏற்படுத்தினார்.




# டென்னிஸ் சம்பியன் விருது அறிவிப்பு



இந்த சீசனில் நான்கு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலும் குறைந்தபட்சம் அரையிறுதியை எட்டிய ஒரே ஒற்றையர் ஆட்டக்காரர்களான நோவக் ஜோகோவிச், அரினா சபலெங்கா ஆகியோர் சர்வதேச டென்னிஸ் கூட்டமைப்பின் 2023 ஐ.டி.எஃப் உலக சாம்பியன்களாக வியாழக்கிழமை கௌரவிக்கப்பட்டனர்.

எட்டாவது முறையாக ஏ.டி.பி தரவரிசையில் நம்பர் 1 இடத்தைப் பிடித்த ஜோகோவிச், அவுஸ்திரேலியன் ஓபன், பிரெஞ்ச் ஓபன், யு.எஸ் ஓபன் ஆகியவற்றை வென்று, ஆண்களுக்கான முன்னணி 24 ஆக உயர்த்தி, விம்பிள்டனில் இரண்டாம் இடத்தைப் பிடித்தார். அவர் 56-7 என்ற கணக்கில் சென்று ஏழு பட்டங்களுடன் ஆண்கள் சுற்றுப்பயணத்தை வழிநடத்தினார். இது அவரது எட்டாவது ITF உலக சாம்பியன் விருது, இது ஒரு சாதனையும்கூட. சபலெங்கா தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்திற்காக அவுஸ்திரேலிய ஓபனை வென்று, யு.எஸ்.ஓபனில் இரண்டாம் இடத்தைப் பிடித்து, பிரெஞ்ச் ஓபன் மற்றும் விம்பிள்டனில் அரையிறுதிக்கு முன்னேறிய பிறகு முதல் முறையாக இந்த கௌரவத்தைப் பெற்றார். சபலெங்கா செப்ரெம்பர் மாதம் WTA தரவரிசையில் நம்பர் 1 இல் அறிமுகமானார், அந்த ஆண்டின் சிறந்த WTA வீரரான Iga Swiatek க்குப் பின் 2ஆவது இடத்தைப் பிடித்தார். ITF உலக சாம்பியனான பெண்கள் இரட்டையர் பிரிவில் Storm Hunter மற்றும் Elise Mertens, ஆண்கள் இரட்டையரில் ராஜீவ் ராம் மற்றும் ஜோ சாலிஸ்பரி, பெண்கள் சக்கர நாற்காலி பிரிவில் Diede de Groot, ஆண்கள் சக்கர நாற்காலி பிரிவில் Alfie Hewett, குவாட் சக்கர நாற்காலி பிரிவில் நீல்ஸ் வின்க் மற்றும் அலினா ஆகியோர் அடங்குவர். ஜூனியர் பிரிவில் கோர்னீவா மற்றும் ஜோவா பொன்சேகா. ITF உலக சாம்பியன் தேர்வுகள் கிராண்ட்ஸ் லாம், ITF சர்வதேச குழு போட்டிகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கின்றன.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 15.12.2023 அன்று வெளியிடப்பட்டது.